1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நான் ஏற்கனவே சொன்னேன். அதற்கான பரிசீலனையில் இப்போது அண்ணா போக்குவரத்துக் கழகம் இருக்கிறது என்று. அந்தப் பேருந்துகள் சிறப்பாக செயல்பட வேண்டுமென்ற காரணத்தால், ஆண்டுக்கு ஒரு முறை புதிய பேருந்துகளாக மாற்றிக் கொண்டிருக்கிறோம், எனவே இப்படிப்பட்ட வசதிகளைச் செய்கின்றபோதுகூட. தனியார்கள் இன்னும் அதிகமாகச் செய்கின்ற காரணத்தால், சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதையும் ஈடுகட்டுகின்ற வகையிலே அண்ணா போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், பெங்களூர் போகும் வண்டிகளிலே தனியார்கள் வீடியோக்களை எல்லாம் வைத்திருக்கிறார்கள். எனவே அண்ணாப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளிலும் இந்த மாதிரியான வீடியோக்களை வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதற்கான ஒரு சட்டம் வந்திருக்கிறது. எனவே அந்தச் சட்டத்தின் மூலமாக அது கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார்கள் பொருத்தும் திட்டம்.

256—(*வினா எண். 18842—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள எல்லா சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம். இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் அதற்கான குறிப்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்போது ஏற்கனவே பல ரிக்ஷாக்களில் மோட்டார்கள் பொருத்தப்பட்டு அவைகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அப்படி ஓடுகின்றபோது அதிலே இரண்டு பேர்கள் உட்கார்ந்து வேகமாகப் போகும்

போது, அதனால் வண்டி ஆட்டம் கொடுத்துக் கொண்டு போகிறது. எனவே அதிலே 3 பேர்கள் உட்கார்ந்து போனால், ஆட்டம் கொடுக்காமல், நல்லமுறையில் போக முடியும் என்று ஓட்டுநர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அந்த முறையிலே அரசு அவர்கள் 3 பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 3 பேர்களை அனுமதித்தால், வண்டியின் ஆட்டம் கட்டுப்படுத்தப்படும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நிபுணர்கள் 3 பேர்களை அனுமதித்தால் ஆபத்து என்று சொல்கிறார்கள். ஆகவே எதை எடுத்துக்கொள்வது என்று உறுப்பினரே முடிவு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்காக, அவர்கள் வங்கிகளிலே சென்று கடன் கேட்டால், கடன் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் குறிப்பிட்ட வங்கிகளுக்கு, இந்தமாதிரியான சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துவதற்குக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு முடிவு எடுத்து, கூட்டுறவுத் துறையின் மூலமாக ஒரு வண்டிக்கு ஆயிரம் ரூபாய் என்று நாம் 109 வண்டிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். யார் சங்கம் அமைக்கிறார்களோ, அந்தச் சங்கங்களுக்கு வண்டி ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்று முடிவு செய்கிறார்கள். இதிலே சங்கம் அமைக்க யாராவது முன்வந்து, 50 உறுப்பினர்களுக்குக் குறையாமல் 100 உறுப்பினர்களுக்கு மேற்படாமல் இருந்தால் உதவி செய்கிறார்கள். எனவே இதற்கு அவர்கள் தயாராக வருவார்களானால், ஒத்துழைப்புக் கொடுப்பார்களானால், நாம் வேகமாக நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கம் அமைத்தால், அதற்குரிய நடவடிக்கை எடுத்து நிதி உதவி வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். திருச்சியிலே 2 ஆண்டுக்கு முன்பாக ஒரு சங்கம் அமைக்கப்பட்டு, நிதி உதவி கேட்டுப் பார்த்து, இன்னும் கிடைக்காமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? அதைப்பற்றி ஆராய்ந்து தற்போது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 10]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிந்தது போல் எனக்கும் தெரியும். ஆனால் சூழ்நிலையின் காரணமாக அதிலே தீவிரமான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால் தற்போது சென்னை மற்றும் பல இடங்களிலேயும் அதை விரிவாக்க வேண்டும் என்ற ஏற்பாட்டை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

1983 ஜூலை முடிய அனைத்து மாவட்டங்களிலும்
ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள்.

257—(*வினா எண். 20902)—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் அரசுத் துறையிலும், தனியார்த் துறையிலும் ஓடுகின்ற மொத்த பஸ்கள் எவ்வளவு? (1983 ஜூலை முடிய).

(ஆ) இந்த வருடம் இரு துறைகளிலும் கொடுக்கப்பட்ட மொத்த உரிமங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1983 ஆம் ஆண்டு ஜூலை முடிய அனைத்து மாவட்டங்களிலும் அரசுத் துறையில் 7,417 வழித்தடப் பேருந்துகளும், 738 மாற்றுப் பேருந்துகளும், தனியார் துறையில் 4,641 வழித்தடப் பேருந்துகளும் 451 மாற்றுப் பேருந்துகளும் ஓடிக்கொண்டிருந்தன.

(ஆ) 1983 ஆம் ஆண்டு ஜூலை முடிய அரசுத் துறையில் 406 பேருந்துகளுக்கும், தனியார் துறையில் 26 பேருந்துகளுக்கும் உரிமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை நீண்ட காலத்திற்கு முன்னாலேயே எழுப்பினேன். நான் அமைச்சரிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், இப்போது மூன்றில் 2 பங்கு அரசுத் துறைக்கும், அதேபோல் மூன்றில் 1 பங்கு தனியார் துறைகளுக்கும் பஸ்கள் ஓட்டுவது போல் உரிமங்கள் கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதிலே உள்ள கணக்கைப் பார்த்தால், தனியார் துறைக்கு 26 உரிமங்களும், அரசுத்துறைக்கு 406 உரிமங்களும் கொடுத்